


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.09.2024) தலைமைச் செயலகத்தில், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி எஸ். சாந்தா சாமிளா சந்தித்து, 5 நிமிடங்களில் ஒரே நேரத்தில் இரண்டு கைகளிலும் பன்னிரெண்டு திருக்குறளை எழுதி சாதனை படைத்ததற்காக India Book of Records வழங்கிய சான்றிதழையும், ஒரு நிமிடத்தில் 14 கண்ணாடி பிரதிபலிப்பு தமிழ் எழுத்துக்களை (Mirror Image) இரண்டு கைகளிலும் ஒரே நேரத்தில் எழுதி சாதனை படைத்ததற்காக International Book of Records வழங்கிய சான்றிதழையும் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது பெற்றோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.09.2024) முகாம் அலுவலகத்தில், ஹங்கேரி நாட்டின் தலைநகர் புடாபெஸ்தில் நடைபெற்ற 45வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற இரண்டு பிரிவிலும் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த செஸ் கிராண்ட்மாஸ்டர்கள் குகேஷ், பிரக்ஞானந்தா மற்றும் செல்வி வைஷாலி ஆகியோருக்கு தலா 25 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகையாகவும், அணியின் தலைவரான ஸ்ரீநாத் நாராயணன் அவர்களுக்கு 15 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், என மொத்தம் 90 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் பிரதிநிதிகளின் கருத்துகளுக்கு எதிராக ஆளுநர்கள் செயல்படும் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்!

# மாநில சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க காலக்கெடு விதிக்க வேண்டும்!

**புதுடெல்லியில் – காமன்வெல்த் பாராளுமன்றக் கூட்டமைப்பின் இந்திய பிராந்தியத்தின் 10வது கூட்டத்தில் – பேரவைத் தலைவர் மு.அப்பாவு வலியுறுத்தல்!**

புதுடெல்லி, செப்.26-

“குறிப்பிட்ட காலத்திற்குள் மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க காலக்கெடு விதிக்க வேண்டும். தங்களுக்கு இல்லாத அதிகாரங்கள் இருப்பதாகக் கருதி மக்கள் பிரதிநிதிகளின் கருத்துகளுக்கு எதிராக ஆளுநர்கள் செயல்படும் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நவீன இந்தியாவை உருவாக்க ஒட்டு மொத்த தேசமும் கடுமையாகப் பாடுபட்டு முன்னேறி வரும் நிலையில், ஆளுநர்கள் 100 ஆண்டுகள் பின்னோக்கிச் செல்வது மிகுந்த வேதனை அளிக்கிறது” என்று, புதுடெல்லியில் நடைபெற்ற காமன்வெல்த், பாராளுமன்றக் கூட்டமைப்பின் இந்திய பிராந்தியத்தின் 10வது கூட்டத்தில் பேசிய தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு வலியுறுத்தினார்.

இக்கூட்டத்தில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் பேசியதாவது :-

இந்திய ஜனநாயகத்தில் முக்கிய பங்காற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தோற்றம், 1921 ஆம் ஆண்டில் மெட்ராஸ் பிரசிடென்சியில் மெட்ராஸ் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் அமைக்கப்பட்டது ஆகும். இது, தற்போதைய தமிழ்நாடு, கேரளா, தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா மாநிலங்களின் மற்றும் ஒடிசா மாநிலத்தின் சில பகுதிகளை உள்ளடக்கியது ஆகும். அந்தக் காலத்தில், இந்தியாவில் சட்டங்களை இயற்றக்கூடிய சட்டமன்ற அமைப்புகள் சென்னை, கொல்கத்தா மற்றும் மும்பையில் மட்டுமே செயல் பட்டு வந்தன.

இங்கிலாந்து பாராளுமன்றத்தினை ‘ஜனநாயகத்தின் தொட்டில்’ என்று அழைப்பர். தமிழ்நாடு சட்டசபையின் மாண்பை பறைசாற்றும் தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவரின் கலைநயமிக்க நாற்காலியை, 1922 ஆம் ஆண்டு மார்ச் 6 ஆம் தேதி நடைபெற்ற ஒரு சுவாரஸ்யமான விழாவில், சென்னை மாகாண ஆளுநர் வெலிங்டன் பிரபு மற்றும் அவரது மனைவி லேடி வில்லிங்டன் ஆகியோரால் அப்போதைய மெட்ராஸ் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் தலைவருக்கு பரிசாக வழங்கப்பட்டது. அந்த நாற்காலி ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக பழமையானது என்றாலும், அது அதன் பொலிவை இழக்காமல், துடிப்பான ஜனநாயகத்தின் அடையாளமாகத் தற்போதும் திகழ்கிறது.

**ஜனநாயகத்தின் மாபெரும் பரிசு!**

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாற்காலியில் அமர்ந்து சபையை நடத்தும் மிகப் பெரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது, இது என்னைப் போன்ற சாமானியனுக்கு ஜனநாயகத்தின் மாபெரும் பரிசாகும். இந்த வாய்ப்பினை எனக்கு வழங்கிய எங்கள் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த நூற்றாண்டில், இந்தியாவின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு சட்டமன்றம் பல முன்னோடி சட்டங்கள் மற்றும் தீர்மானங்களை நிறைவேற்றியது. அப்போதைய மெட்ராஸ் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் 01.04.1921 அன்று இந்தியாவில் பெண்களுக்கு முதல் முறையாக வாக்களிக்கும் உரிமையை வழங்கும் ஒரு வரலாற்றுச் சட்டத்தை நிறைவேற்றியது. இந்திய சட்டமன்ற வரலாற்றில் இடஒதுக்கீடு குறித்த சட்டத்தை இயற்றிய முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இதுவாகும், அதுவே இந்தியாவில் நிலையான கொள்கையாக மாறியுள்ளது.

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதும், மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதும் சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்ற அமைப்புகளின் தலையாய கடமையாகும். சட்டங்களை இயற்றுதல், கொள்கைகளை உருவாக்குதல், வருவாய் ஈட்டுதல், வறுமையை ஒழித்தல், நிர்வாகத்தை மேற்பார்வை செய்தல், எதிர்கால சந்ததியினருக்கான நல்ல திட்டங்களை உருவாக்குதல் ஆகிய மிகமுக்கியமான வேலைகளை சட்டமன்றங்கள் / நாடாளுமன்றம் செய்கின்றன.

**பெரும் சவால்கள்**

பேரவைத் தலைவரின் தலையாய பணி என்பது மக்களின் நலனை அவர்களின் பிரதிநிதிகள், அதாவது சட்டமன்ற உறுப்பினர்கள், மூலம் நிறைவேற்றுவதை உறுதி செய்வதாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 105 மற்றும் 194 ஆகியவை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் அதிகாரங்கள், சிறப்பு உரிமைகள், சலுகைகள் மற்றும்சட்ட ரீதியான விலக்குகளை வழங்குகின்றன. இவ்



வாறு அரசியலமைப்பால் வழங்கப்பட்ட உரிமைகள் மற்றும் சலுகைகளை பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால் சமீபகால நிகழ்வுகள் ஜனநாயகத்திற்கு பெரும் சவால்களை ஏற்படுத்தியுள்ளன.

சமீப காலங்களில், மாநில சட்டமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களால், சில சமயங்களில் ஒருமனதாக, நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகள் பயன்பாட்டிற்கு கொண்டு வர முடியவில்லை. சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சில மசோதாக்கள், காரணமின்றி, பல ஆண்டுகளாக ஆளுநர் அலுவலகத்தில் முடங்கிக் கிடப்பதால், மக்கள் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்கள், மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாமல், அவர்களின் அதிருப்திக்கு ஆளாகின்றனர். பேரவையை அவமதிப்பது என்பது அந்த சட்டமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுத்த மக்களை அவமதிப்பதாகும்.

ஒட்டுமொத்த எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வெளியேற்றப்பட்ட சூழ்நிலையிலும், மக்களவை மற்றும் மாநிலங்களவையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு குடியரசுத் தலைவர் அவர்கள் ஓரிரு மணி நேரத்தில் தனது ஒப்புதலை வழங்குகிறார் என்பதை நான்இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் சில மாநிலங்களில், அம்மாநில சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு கூட அம்மாநில ஆளுநர்கள் ஒப்புதல் அளிப்பதில்லை.

இதுசம்பந்தமாக, மாநில ஆளுநர்கள் குடியரசுத் தலைவரைப் பின்பற்றி மசோதாக்களுக்கு விரைவில் ஒப்புதல் அளித்து, அதன் மூலம் அரசியலமைப்பு விதிகளை நிலைநிறுத்தும் வகையில் ஒரு அமைப்பு முறையை உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்களின் தலையீட்டால் ஏற்படும் குழப்பங்களை தவிர்க்க முடியும்.

தமிழ்நாடு மக்களின் விருப்பங்களையும் நலனையும் நேரடியாகப் பாதித்த ஒரு விஷயத்தை இங்கே பதிவு செய்வது மிகுந்த வேதனையாக உள்ளது. அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவுடன் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை ஆளுநர் எந்தக் காரணமும் கூறாமல் நிறுத்தி வைப்பதாக தெரிவித்தார். மாண்பமை உச்ச நீதிமன்றத்திடம் இப்பிரசிச்னை குறித்து எடுத்துச் சென்ற பின்னர், தமிழ்நாடு சட்டமன்றத்தில் அம்மசோதாக்கள் மீண்டும் நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டன. அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்குக் கட்டுப்பட்ட ஆளுநர், மசோதாக்களுக்கு தனது ஒப்புதலை வழங்குவதற்கு பதிலாக குடியரசுத் தலைவரின் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார். குடியரசுத் தலைவர் அவர்களும் இந்த மசோதாக்களில் பலவற்றிற்கு எந்தக் காரணமும் கூறாமல் தனது ஒப்புதலை நிறுத்தி வைத்தார். மேலும், முதன்மைச் சட்டங்கள் ஏற்கனவே ஆளுநரால் ஒப்புதல் வழங்கப்பட்ட நிலையில், அந்த மாநிலச் சட்டங்களின் திருத்த மசோதாக்களுக்கு ஆளுநரின் ஒப்புதல் மட்டுமே போதும், அவற்றை குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பத் தேவையில்லை. இவ்வாறு மசோதாக்களை நிறுத்தி வைப்பதன் மூலம், தமிழ்நாடு மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மேலும் நிறுத்தி வைப்பதற்கான காரணமும் கூறப்படாததால், சீரமைப்பு நடவடிக்கையும் எடுக்க முடியாதநிலை உள்ளது.

**இழுத்தடிப்பு!**

மேலும், நீட் தேர்வு மசோதா ஆளுநர் அலுவலகத்துக்கும், குடியரசுத் தலைவர் அலுவலகத்துக்கும் இடையே இழுத்தடிக்கப்படுவதால் இலட்சக்கணக்கான தமிழ்நாடு மாணவர்களின் எதிர்காலத்திற்கு பெரும் சவாலாக உள்ளது. இத்தகைய சூழ்நிலையைத் தீர்க்க, சிம்லா மற்றும் மும்பையில் நடைபெற்ற அனைத்திந்திய பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் நான் தெரிவித்த கருத்தை மீண்டும் இங்கு வலியுறுத்துகிறேன், குறிப்பிட்ட காலத்திற்குள் மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க காலக்கெடு விதிக்க வேண்டும்.

தங்களுக்கு இல்லாத அதிகாரங்கள் இருப்பதாகக் கருதி மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களுக்கு எதிராக ஆளுநர்கள் செயல்படும் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நவீன இந்தியாவை உருவாக்க ஒட்டு மொத்த தேசமும் கடுமையாகப் பாடுபட்டு முன்னேறி வரும் நிலையில், ஆளுநர்கள் 100 ஆண்டுகள் பின்னோக்கிச் செல்வது மிகுந்த வேதனை அளிக்கிறது.

மற்றொரு முக்கியமான விஷயம், பொதுப் பட்டியலில் உள்ள பொருள்கள் பற்றியது ஆகும். ஒன்றிய அரசு கல்வி, சுகாதாரம் போன்ற பொது பட்டியலில் உள்ள பொருள்கள் குறித்து மாநில மக்களின் உணர்வுகளைப் புறக்கணித்து சட்டங்களை இயற்றுகிறது. அதன் விளைவாக, மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மேலும், தங்கள் ஆட்சேபனைகளையும் கோபத்தையும் மாநில அரசுகளிடம் மட்டுமே காட்டுகிறார்கள், ஏனெனில் அவர்களுடன் நேரடியாக தொடர்பிலிருப்பது மாநில அரசுகள்மட்டுமே.பொதுப் பட்டியலில் உள்ள விஷயங்களில் ஒன்றிய அரசு குறிப்பிட்ட அளவில் மட்டுமே தலையிட வேண்டும். மேலும், அந்தந்த மாநில மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கும் வகையில் மாநில சட்டசபைகள் நிறைவேற்றும் மசோதாக்கள் மற்றும் தீர்மானங்களை ஒன்றிய அரசு மதிக்கும் வகையில் சீர்திருத்தங்களை கொண்டு வரப்பட வேண்டும்.

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை நடவடிக்கைகளில் முதல் மணிநேரம், அதாவது கேள்வி நேரம், அனைத்து தரப்பு மக்களின் கோரிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் மிக முக்கியமான அலுவல் ஆகும். பல துணைக் கேள்விகளை அனுமதிப்பதன் மூலம் அனைத்து உறுப்பினர்களுக்கும் தங்களின் கோரிக்கைகளை கூற வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

**ஜனநாயகம் செழிக்கும்!**

நேரமில்லா நேரத்தில் கவன ஈர்ப்பு தீர்மானம், சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் போன்றசட்டமன்ற நடைமுறைகள் மூலம், தமிழக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பங்கேற்பு வெகுவாக அதிகரித்துள்ளது. தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஆளுங்கட்சி உறுப்பினர்களை விட எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கே அதிக வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் இந்த நடைமுறைகள் தொடர வேண்டும் என விரும்புகிறார், ஏனெனில், எதிர்க்கட்சிகளின் கருத்துக்களுக்கு செவி சாய்த்தால் மட்டுமே ஜனநாயகம் செழிக்கும் எனக்கருதுகிறார், நானும்இந்த நடைமுறை தொடர வேண்டும் என்று விரும்புகிறேன். மேலும், மற்ற மாநில சட்டமன்றங்களும், நாடாளுமன்றமும் இந்த நடைமுறையை பின்பற்றும் என்று நான் நம்புகிறேன்.

இவ்வாறு - தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் பேசினார்.

ஹங்கேரியில் 45வது செஸ் ஒலிம்பியாட்டில் தங்கப் பதக்கங்கள் வென்ற

# தமிழ்நாட்டு 3 வீரர், வீராங்கனைகள் - அணித் தலைவருக்கு ஊக்கத் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி வாழ்த்தினார்!

சென்னை, செப்.26-

ஹங்கேரியில் நடைபெற்ற 45-வது செஸ் ஒலிம்பியாட்டில் தங்கப் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டை சேர்ந்த 3 வீரர், வீராங்கனை கள் மற்றும் அணி தலைவர் ஆகியோருக்கு உயரிய ஊக்கத்தொகையாக ரூ.90 இலட்சத்திற்கான காசோலைகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி, வாழ்த்தினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.09.2024) முகாம் அலுவலகத்தில், ஹங்கேரி நாட்டின் தலைநகர் புடாபெஸ்தில் இம்மாதம் நடைபெற்ற 45-வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற இரண்டு பிரிவிலும் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டை சேர்ந்த செஸ் கிராண்ட்மாஸ்டர்கள் குகேஷ், பிரக்ஞானந்தா, செல்வி வைஷாலி மற்றும் அணியின் தலைவரான ஸ்ரீநாத் நாராயணன் ஆகியோருக்கு உயரிய ஊக்கத்தொகையாக மொத்தம் 90 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி, வாழ்த்தினார்.

விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் பொதுமக்களுக்கும், மாணவ, மாணவியர்களுக்கும் சதுரங்க போட்டி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக 44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை இந்திய வரலாற்றில் முதன் முறையாக தமிழ்நாட்டில், பல்லவர் காலச் சிற்பக் கலையினை பறைசாற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமான மாமல்லபுரத்தில் 28.7.2022 முதல் 10.8.2022 வரை மிகச் சிறப்புடன் நடத்தப்பட்டது. இந்த போட்டியில் சர்வதேச அளவில் 185-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 2000-க்கும் அதிகமான சதுரங்க விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் பங்கேற்றனர்.

மேலும், சதுரங்க விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில், சர்வதேச அளவில் நடைபெறும் சதுரங்க போட்டிகளில் வெற்றி பெறும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சதுரங்க விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையினை தமிழ்நாடு அரசு வழங்கி சிறப்பித்து வருகிறது.

அந்த வகையில், ஹங்கேரி நாட்டின் தலைநகர் புடாபெஸ்தில் செப்டம்பர் 10 முதல் 23 வரை நடைபெற்ற 45-வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற இரண்டு பிரிவிலும் தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டை சேர்ந்த செஸ் கிராண்ட்மாஸ்டர்கள் குகேஷ், பிரக்ஞானந்தா மற்றும் செல்வி வைஷாலி ஆகியோருக்கு தலா 25 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகையாகவும், அணியின் தலைவரான ஸ்ரீநாத் நாராயணன் அவர்களுக்கு 15 லட்சம் ரூபாய்க்கான காசோலையும், என மொத்தம் 90 இலட்சம் ரூபாய்க் கான காசோலைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கி, வாழ்த்தி, அடுத்து வரும் குளோபல் செஸ் லீக் போட்டிகளில் வெற்றி பெற்று நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, செஸ் விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் பெற்றோர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ரூ 43.40 கோடி மதிப்பில் –

# தாம்பரம் மாநகராட்சிக்குப் புதிய அலுவலகக் கட்டிடம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, செப்.26-

தாம்பரம் மாநகராட்சியானது தாம்பரம், பல்லவபுரம், பம்மல், அனகாபுத்தூர், செம்பாக்கம் ஆகிய ஐந்து நகராட்சிகளையும் மாடம்பாக்கம், சிட்லப்பாக்கம், திருநீர்மலை, பெருங்களத்தூர் மற்றும் பீர்க்கன்கரணை ஆகிய பேரூராட்சி பகுதிகளையும் உள்ளடக்கி பெரிய மாநகராட்சியாக 03.11.2021 முதல் செயல்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 87.64 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 7,23,017 மற்றும் தற்போதைய மக்கள்தொகை 10,39,842 ஆகும். மேலும், தாம்பரம் மாநகராட்சியுடன் இம்மாநகரையொட்டி அமைந்துள்ள ஊராட்சிகளையும் இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்படவுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை (நிலை) எண். 156, நாள் 26.10.2022-ன் மூலம் புதியதாக உருவாக்கப்பட்ட தாம்பரம் மாநகராட்சிக்கு அடிப்படை கட்டமைப்பை உருவாக்குவதற்கு ரூ.10.00 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய தாம்பரம் மாநகராட்சி அலுவலகம் போதிய இடவசதி இல்லாத நிலையில் இயங்கி வருவதால் போதிய வசதிகளுடன் புதியதாக மாநகராட்சி அலுவலக கட்டிடம் கட்ட வேண்டியது அவசியமாக உள்ளது. மேலும், தாம்பரம் மாநகராட்சி புதிய அலுவலகம் கட்டுவதற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் அரசாணை (நிலை) எண்.387, நாள் 24.07.2023ல் சிட்லப்பாக்கம் கிராமம், சர்வே எண். 218/2, 226/1, 226/2 மற்றும் 227ல் 1.90.02 எக்டேர் (4.69 ஏக்கர்) ‘அரசு புறம்போக்கு’ வகைப்பாடு இடத்தினை மாநகராட்சி பெயருக்கு உரிமை மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், தாம்பரம் மாநகராட்சியின் புதிய அலுவலக கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.43.40 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்து முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இப்புதிய அலுவலக கட்டடம் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களை கொண்டிருக்கும். மொத்தம் 12,441 சதுர அடி பரப்பளவில் அமையவுள்ள இக்கட்டடத்தில் அலுவலகப் பகுதி, உயர் அலுவலர்களுக்கான அறைகள், மன்றக்கூடம், கணினி மையம், பொதுமக்களுக்கான காத்திருப்பு அறை, கழிப்பறை, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்தூக்கிகள், சாய்வு தளங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக அமையவுள்ளது.

தாம்பரம் மாநகராட்சியின் பொதுமக்கள், அலுவலர்கள் என அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் மாநகராட்சியின் புதிய அலுவலகக் கட்டடம் அமையவுள்ளது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் ஆலோசனைப்படி பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியக் கழகச் செயலாளரும்,பள்ளியின் பெற்றோர் – ஆசிரியர் கழக தலைவருமான பி.எஸ்.சரவணன் பையர்நத்தம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளி தலைமையாசிரியர் கொ.பிரபாகர் தலைமையில் நடைபெற்ற விழாவில் சுமார் 50 மாணவ. மாணவியருக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார். உடன் ஊராட்சிமன்ற தலைவர் சாந்தாகுப்புசாமி, ஒன்றியக் குழு உறுப்பினர் சி.கண்ணன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் திருமதி.தீபாமாதேஷ், மற்றும் பெற்றோர்கள் – ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# விவசாயிகளுக்கு எதிரான குற்றத்தை மோடி அரசு உணரவில்லை!

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

புதுடெல்லி, செப். 26 -

மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக போராடிய விவசாயிகள் மீது பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க., அரசு பல்வேறு அடக்குமுறைகளை கையாண்டது. போராட்டத்தில் பல விவசாயிகள் உயிரிழந்தனர். இதனையடுத்து, இச்சட்டங்களை திரும்பப் பெறுவதாக ஒன்றிய அரசு அறிவித்தது.

இந்நிலையில், நடிகையும், பா.ஜ.க., எம்.பி.,யுமான கங்கனா ரணாவத், வேளாண் சட்டங்களை மீண்டும் கொண்டு வர வேண்டும் என கருத்துத் தெரிவித்திருந்தார். இதற்கு நாடு முழுவதும் அரசியல் கட்சியினர், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவும் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளார்.



விவசாயிகளுக்கு எதிராக செய்த குற்றத்தை பா.ஜ.க.வும், மோடி அரசும் உணரவில்லை என்று அவர் சாடியுள்ளார். விவசாயிகளுக்கு எதிராக துப்பாக்கிகளையும், கண்ணீர் புகை குண்டு களையும் பயன்படுத்தியதை மக்கள் மறக்க மாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.